# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.97/2022 தேதி-24.04.2026
(PW.1) – ரவீந்திரன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.இந்த வழக்கு பட்டிகை சொத்தை காளியம்மாள் என்பவரிடமிருந்து நானும், என் சகோதரர்களான மற்ற வாதிகளும் உடன் சேர்ந்து கிரயம் வாங்கினோம் என்றால் சரிதான். காளியம்மாள் என்பவருக்கு அவருடைய தாயாரான ராமலட்சுமி இஷ்டதான ஆவண மூலமாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி இஷ்டதான ஆவணத்தில் ராமலட்சுமி காளியம்மாளுக்கு கொடுத்த நிலமானது கோதை நல்லூர் கிராமம் புதிய புல எண்.213/18 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் காளியம்மாளிடம் இருந்து வா.சா.ஆ.2 ன் படி கிரயம் வாங்கிய சொத்தின் கோதை நல்லூர் புதிய புல எண்.213/18 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காளியம்மாள் என்பவருக்கு புதிய புல எண்.213/18 ல் கிடைத்த சொத்தை தான் எங்களுக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். காளியம்மாள் இஷ்டதான ஆவணத்தின் மூலமாக கிடைத்த புதிய புல எண்.213/18 ல் உள்ள சொத்தை தான் அவர் கிரயம் கொடுக்க உரிமையுள்ளது என்றால் சரிதான்.

3. காளியம்மாள் என்பவருக்கு இந்த வழக்கு சொத்தான புதிய புல எண்.213/10 ல் எந்தவித உரிமை ஆவணங்களும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காளியம்மாள் என்பவருக்கு புதிய புல எண்.213/10 ல் உள்ள சொத்தில் உரிமையுள்ளதாக காண்பிக்கக்கூடிய எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 புல எண் தவறாக உள்ளது என்பதை நிரூபிக்க சம்மந்தப்பட்ட துறைகளில் மனு அளித்து சான்று பெற்று இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

4. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணமான புல ஒற்றுமை சான்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் புல எண்.213/10 என்பது தவறாக 213/18 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது

என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, பழைய புல எண்ணிற்கான புதிய புல எண்களின் விவரங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. பழைய புல எண்.840A1 ற்கான புதிய புல எண்கள் 213/8, 213/9, 213/10 என்று மூன்று புதிய புல எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.7 ஆவணத்தில் பழைய புல எண்.840A2 ற்கான புதிய புல எண்.213/18 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கிரய ஆவணத்தின் படி வழக்கு பட்டிகை சொத்தின் பழைய புல எண்.840A என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ன் படி பழைய புல எண்கள் 840A1 மற்றும் 840A2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காளியம்மாள் என்பவரோ, நானோ மற்ற வாதிகளோ புதிய புல எண் தவறாக உள்ளது என்று எந்த சீர்த்திருந்த ஆவணம் எதுவும் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் இல்லை.

6. இந்த வழக்கில் எனக்கு கிரயம் தந்த காளியம்மாள் என்பவரை நான் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 உறுதிமொழி பத்திரமானது நானும், மற்ற வாதிகளும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் காளியம்மாள் கட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் உள்ள புல எண்ணை உறுதிமொழி பத்திரம் வாயிலாக சட்டப்படி மாற்ற இயலாது என்றால் சரியல்ல.

7. மேற்படி உறுதிமொழி பத்திரம் மூலமாக எந்தவித உரிமை மாற்றமும் ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. உறுதிமொழி பத்திரத்தின் அடிப்படையில் எந்தவித உரிமை மாற்றமும் ஏற்படுத்த முடியாத இயலாது நிலையில் அதன் அடிப்படையில் பெறப்பட்ட பட்டா மற்றும் கரதீர்வை இந்த வழக்கு சொத்தில் எந்தவித உரிமையும் நிலை நிறுத்த முடியாது என்றால் சரியல்ல. புதிய புல எண் மாற்றம் என்பது உரிமை மாற்றம் தொடர்பானது என்றால் சரிதான். அவ்வாறான உரிமை மாற்றத்திற்கு சீர்த்திருத்த பத்திரத்தை காளியம்மாள் என்பவரோடு ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கு சொத்தின் புல எண் தவறானது என்பதை நிரூபிக்க எந்தவித ஆவணமும் தாக்கல் செய்ய இயலாததால் இந்த வழக்கில் கோரும் பரிகாரம்

கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ன் படி புதிய புல எண்.213/18 என்பதாலும், மேற்படி புல எண் தவறானது என்று சீர்த்திருத்த ஆவணம் ஏற்படுத்தாத நிலையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த மூலகாரணமும் இல்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பு வழக்கறிஞர் மறுவிசாரணை -</u>**

9. புதிய புல எண்.213/18 என்பது தவமணி மகன் மெர்லின் தங்கராஜா என்பவரின் பெயரில் தனிப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன இணைய வழி தனிப்பட்டா வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை-</u>**

10.வா.சா.ஆ.11 ஆவணத்தின் மெர்லின் தங்கராஜா என்பவருக்கு புதிய புல எண்.213/18 ல் தனிப்பட்டா எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புல எண்.213/18 சொத்தை இந்த வழக்கில் பட்டிகை சொத்ததாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன வா.சா.ஆ.11 ஆவணம் எந்த வழக்கை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.